# வைகாசி மாத
# ஞானம் வழங்கும் பருவப் பூசை
# பால்குடப் பெருவிழாச் சிறப்பிதழ்!

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் தலைமைச் செயலகமான காரியேந்தல்பட்டியில் இவ்வாண்டு சூன் மாதம் 12ஆம் தேதி மாபெரும் ஞானப் பெருவிழா நடைபெற உள்ளது. இம்மாபெரும் விழாவில், அருட்சத்திக் கோட்டத்தில் அமர்ந்து ஆட்சி புரியும் அருள்மிகு வீரமாகாளியம்மனுக்கும் மற்றும் உடனிருந்து அருள்வழங்கிச் செயல்படும் அனைத்துவகைச் சத்திகளுக்கும், வழிபடு நிலையினருக்கும் இஞ்ஞான விழாவில் பால், மஞ்சள் நீராட்டு விழா நடைபெற உள்ளது. இவ்விழாவிற்குக் குருதேவர், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் தலைமையேற்றுச் சிறப்பிக்கின்றார். இதனையொட்டி மதுரை கொட்டாம்பட்டிக்கு அருகிலுள்ள வலைச்சேரிப் பட்டி ஊருணிக்கரையிலிருந்து சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் யாவரும் தங்கள் தங்கள் நேர்ந்துதல்படி பால்குடம், இளநீர்க்குடம், மஞ்சள் நீர்க்குடம், தேன்குடம், ... என்று இன்னருங் குடங்களைத் தலையிலேந்தி மாபெரும் ஊர்வலமாக மாவட்ட வாரியாக அணிவகுத்து காரியேந்தல்பட்டி தலைமைச் செயலகம் நோக்கி வருவர். இம்மாபெரும் பேரணிக்கு அருள்மிகு பரமாச்சாரியார், தலைமைச் செயலாளர், வீரமாகாளி சன்னிதானம் சித்தரடியான் நெ. சேவுகன் தலைமையேற்று வழிநடத்துவார். இவ்விழா இந்து சமயத்தைப் பற்றிய மூட நம்பிக்கைகளையும், மடமைக் கருத்துக்களையும், கேலியுணர்வுகளையும் களைந்தெறியும் விஞ்ஞான விளக்க விழாவாக அமையும். இது ஒரு மாபெரும் சமுதாய ஒற்றுமைச் சிந்தனைக்கு வழிவகுக்கும் முன்னோடி விழா! சமயப் பேருண்மைகள், சமய வரலாறுகள், சமுதாயத்தின் கண்கள் என்பதை விளக்கும் விழா! உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்க வகை செய்யும் விழா!

---

## இந்து மத மறுமலர்ச்சித் திருவிழா

இவ்விழாவினை யொட்டி ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் அருளிய விளக்க வாழ்த்து மடல்!

வைகாசிப் பருவ ஞானம் வழங்கு பெருவிழா
அனைத்துக் குறைகளுமகற்றும் அருள்விழா
உண்மையான இந்துமத விளக்க விழா
ஐந்தீவேட்டல் முத்தீ ஓம்பல் நிகழும் கருவிழா
அருளை அநுபவப் பொருளாக வழங்கும் குருவிழா
சித்தர் நெறிப் பயிற்சி நல்கும் தருவிழா
பத்தர்கள் பயிற்சி பெறும் திருவிழா
தன்னைத் தானறிய உதவும் சத்தி விழா
தானே நானுகிட உதவும் சித்தி விழா
நானே அவனுகிட உதவும் முத்தி விழா
தெரியாமை தெரியவைக்க உதவும் பத்தி விழா
அறியாமை அறியவைக்க உதவும் பத்தி விழா
புரியாமை புரியவைக்க உதவும் பத்தி விழா
தெளியாமை தெளியவைக்க உதவும் பத்தி விழா
உணராமை உணரவைக்க உதவும் பத்தி விழா

ஒப்பாமை ஒப்பவைக்க உதவும் பத்தி விழா
விரும்பாமை விரும்பவைக்க உதவும் பத்தி விழா
நம்பாமை நம்பவைக்க உதவும் பத்தி விழா
பால்குடம் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
தயிர்குடம் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
நெய்க்குடம் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
இளநீர்க்குடம் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
தேங்காய்நீர்க்குடம் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
மஞ்சள்நீர்க்குடம் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
சந்தனநீர்க்குடம் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
பன்னீர்க்குடம் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
அக்கினிச்சட்டி அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
காவடி அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
கருவறைகள் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
எழுந்தருளிகள் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
பூசாறிகள் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
குருக்கள்கள் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
பண்டாரங்கள் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
பட்டர்கள் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
தீத்தச்சர்கள் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
ஓதுவார்கள் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
தேசிகர்கள் அருளூற்றுகிட உதவும் பத்தி விழா
தமிழினத்துக்கு ஒருமைப்பாட்டுணர் வூட்டும் பத்தி விழா
தமிழினத்துக்கு ஒற்றுமை உணர்வூட்டும் பத்தி விழா
தமிழினத்துக்கு மொழியுரிமை உணர்வூட்டும் பத்தி விழா
தமிழினத்துக்குப் பண்பாட்டு விழிச்சி உணர்வூட்டும் பத்தி விழா
தமிழினத்துக்கு நாகரிக எழுச்சி உணர்வூட்டும் பத்தி விழா
தமிழினத்துக்குப் பெருமித உரிமை யுணர்வூட்டும் பத்தி விழா
தமிழினப் பழிநிலைகளை அகற்றும் பத்தி விழா
தமிழின இழிநிலைகளை அகற்றும் பத்தி விழா
தமிழின ஒழிநிலைகளை அகற்றும் பத்தி விழா
தமிழின அழிநிலைகளை அகற்றும் பத்தி விழா
தமிழின வீழ்நிலைகளை அகற்றும் பத்தி விழா
தமிழின ஆழ்நிலைகளை அகற்றும் பத்தி விழா
தமிழினத் தாழ்நிலைகளை அகற்றும் பத்தி விழா
தமிழினத் துரோக நிலைகளை அகற்றும் பத்தி விழா
தமிழின விரோத நிலைகளை அகற்றும் பத்தி விழா
தமிழினப் பட்டாளம் உருவாக்கும் பத்தி விழா
தமிழினப் படை திரட்டும் பத்தி விழா
தமிழினப் பாசறை யமைக்கும் பத்தி விழா
தமிழினப் பாடிவீடு கட்டும் பத்தி விழா
தமிழின் தெய்வீக நிலைகளை விளக்கிடும் பத்தி விழா
தமிழின் தொன்மை நிலைகளை விளக்கிடும் பத்தி விழா
தமிழின் வரலாற்று நிலைகளை விளக்கிடும் பத்தி விழா
தமிழின் பண்பாட்டு நிலைகளை விளக்கிடும் பத்தி விழா
தமிழின் நாகரிக நிலைகளை விளக்கிடும் பத்தி விழா
தமிழின் வளநிலைகளை விளக்கிடும் பத்தி விழா
தமிழின் வலிவு நிலைகளை விளக்கிடும் பத்தி விழா
தமிழின் பொலிவு நிலைகளை விளக்கிடும் பத்தி விழா

தமிழின் வளவளர்ச்சிக்கு உதவும் பத்தி விழா
தமிழுணர்ச்சியின் விழிச்சிக்கு உதவிடும் பத்தி விழா
தமிழுணர்ச்சியின் எழுச்சிக்கு உதவிடும் பத்தி விழா
தமிழுணர்ச்சியின் செழுச்சிக்கு உதவிடும் பத்தி விழா
தமிழுணர்ச்சியின் ஆட்சி மீட்சிக்கு உதவிடும் பத்தி விழா
தமிழுணர்ச்சித் தாழ்ச்சித் தளர்ச்சிக்கு உதவிடும் பத்தி விழா
தமிழினத்துக்குத் தன்னம்பிக்கையூட்டிடும் பத்தி விழா
தமிழினத்துக்குத் தன்மானப் பிடிப்பூட்டும் பத்தி விழா
தமிழினத்துக்குத் தாய்மொழிப் பற்றூட்டும் பத்தி விழா
தமிழினத்துக்கு நாட்டுப் பற்றூட்டும் பத்திவிழா
தமிழினத்துக்கு இனப்பற்றூட்டும் பத்தி விழா.

---

## பால்குட விழா நிகழ்ச்சி நிரல்

தேதி: 12-6-84 செவ்வாய் காரியேந்தல்பட்டி

காலை 10.00 மணி (1) பதிவு அட்டை வழங்கப்படும்
(2) புதியதாகவும் பதிவு செய்யப்படும்

மதியம் 12.00 மணி அருள்மிகு வீரமாகாளி சன்னிதானத்திலிருந்து வலைச்சேரிப்பட்டிக்குச் செல்லுதல்.

பிற்பகல் 2.00 மணி தலைமைச் செயலாளர் அருள்மிகு பரமாச்சாரியார் நெ. சேவுகன் தலைமையில் பதினெண் சித்தர்கள் முறையில் யாகம் நடத்திப் பேரணி துவக்குதல்

பிற்பகல் 3.00 மணி பால்குட விழாவினர் மாவட்ட வாரியாக அணிவகுத்தல். 'இந்து சமய முழக்கம், தமிழ் மொழி முழக்கம், இயக்க முழக்கம், குருதேவர் முழக்கம் முழங்கி காரியேந்தல்பட்டி நோக்கிச் செல்லுதல்

மாலை 4.00 மணி கொட்டாம்பட்டியில் "குருதேவர்" பேரணியைக் காணல்
6.00 மணி அருள்மிகு வீரமாகாளிக்கு குடமுழுக்காட்டல்
7.00 மணி குருதேவரின் அருளுரை
8.00 மணி அருளூறு பூசனைப் பொருட்கள் வழங்கல்

இரவு 10.00 மணி குருதேவரால் அருள்வாக்கு, அருட்கணிப்பு நிகழும்.

---

## ஞானம் வழங்கும் பருவப் பூசை

எண்ணிக்கை தெரிந்தவர்கள் சித்தர்கள், எதையும் எண்ணிக்கையிட்டே வளர்த்தவர்கள், சொன்னவர்கள், எழுதிவைத்தவர்கள் சித்தர்கள். இராசிகளின் எண்ணிக்கை அடிப்படையிலோ, கோள்களின் எண்ணிக்கை அடிப்படையிலோ, விண்மீன்களின் எண்ணிக்கை அடிப்படையிலோ இவற்றின் கூடுதல்கள், மடங்குகள் அடிப்படையிலோதான் பதினெண் சித்தர்கள் மந்திரங்கள், எந்திரங்கள், சாத்திரங்கள்,

தோத்திரங்கள், ஆகமங்கள், ... போன்றவற்றைப் படைத்தனர். இவ்வடிப்படையிலேதான் ஓராண்டுக்குரிய மாதங்களை பன்னிரண்டாகப் பிரித்து முறையாகப் பெயரிட்டுச் சென்றனர். அவர்களின் கருத்துப் படியே வைகாசி மாதம் ஞானத்துக்குரிய மாதமாக இன்றளவும் போற்றப்படுகின்றது.

இதை வரலாறும் மெய்யென்றே மெய்ப்பித்துள்ளது. முதல் உகத்தின் தலைவனான முருகன் கிரேதா உகத்தின் முடிவில் அசுரர்களை வென்று முடித்தபின் முத்தி அடைந்தது வைகாசி மாதத்தில்தான். பின் வந்த உகத்தலைவர்களும் அவ்வாறேதான். புத்தமதத்தைத் தோற்றுவித்த புத்தரும், சமண மதத்தைத் தோற்றுவித்த மகாவீரரும் ஞானம் பெற்றது வைகாசி மாதத்தில்தான். இந்துமத வளர்ச்சிக்காகவும், செழுச்சிக்காகவும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்த பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரூரும், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூரும் செயல்படத் துவக்கியதும், துவங்கியதும் இவ் வைகாசி மாதத்தில்தான். பிற்காலச் சோழப் பேரரசன் இராசராசன் தமது 108-வது வயதில் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் சாபத்தால் சித்திரை முழுநிலவில் தற்கொலை செய்து கொண்ட பின்னால், தமது சீடர்களுக்கு ஞானம் இப்பருவ பூசையில்தான் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் வழங்கினார் என்று குருபாரம்பரியம் குறிக்கின்றது.

இன்றைய தினம் செயல்பட்டு வரும் நமது இயக்கம் முதலில் கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியாரால் துவக்கப்பட்டது இவ்வைகாசி மாதத்தில்தான். எனவேதான், இம்மாத முழுநிலவு நாளை நாம் அனைவரும் வெகு சிறப்பாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றோம். வெறும் சமய விழாவாக மாறிவிடாமல் தடுக்கவேதான் சமுதாய விழாவாக இதைக் கொண்டாடுகின்றோம். அனைத்து வகையான மக்களும் சாதி, மத, இன, பேதமின்றி கலந்து கொண்டு செயல்பட்டு அருள்பெற்றுச் செல்லத்தான் பால்குடப் பெருவிழாவை இதையொட்டி அமைத்துள்ளோம். சித்தர் நெறியெனும் ஊற்றில் பிறந்ததுதான் உலக மதங்கள் என்பதால்; எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்றாலும் தாராளமாக இப்பால்குட விழாவிலும், வைகாசி மாத முழுநிலவுப் பூசையிலும் மாதந்தோறும் நடைபெறும் அருள் வழங்கும் பூசையிலும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.

இப்பருவ பூசையின் போது உலக அருளாளர்கள் உலகப் பயிரின உயிரின மானுட இன நலனுக்காக யாகங்கள் நடத்தி அண்ட பேரண்ட விண்வெளியிலுள்ள அருளணுக்களைப் பெற்று வழங்கி வருகின்றனர். இதை ஒவ்வொருவரும் இப்பூசையின் போது பெற்று உய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான் பதினெண்சித்தர்களின் முறைப்படி நாடெங்கும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் மூலம் யாகசாலைகள், வெட்டவெளிக் கருவறைகள் கட்டி நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

ஒவ்வொருவரும் தன்னையறியவும், தன்னை அறிவதன் மூலம் தலைவனை யறியவும் கற்றுத் தரப் படுகின்றன. முன்னை அறியும் அறிவே மெய்யறிவு. பின்னை யறிவு பேயறிவு என உணர்த்தப் படுகின்றன. தனி மனிதர்கள் விழிச்சியே சமய எழுச்சி! சமய எழுச்சியே சமுதாயச் செழுச்சி! என்பதைத் தெளிவாக வரையறுத்துக் கூறிச் செயலாக்கி வருகின்ற முறைகள்தான் இப்பூசை முறைகள். தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு எனும் முக்கோணக் கோட்டையை வலுப்படுத்தும் சத்தியாகத்தான் இம்முறைகள் செயல்படுகின்றன. இதனை உணர்ந்து அனைவரும் பயன்படுத்துவோம்.

# சத்திகள் எத்தனை வகை?

"... 'கணக்குத் தெரியாதவர்கள் வீட்டில் நித்தம் நித்தம் சண்டை நடக்கும்' என்பது போல் அருளுலகப் பேருண்மைகளின் அரிச்சுவடியும், வாய்ப்பாடும் தெரியாத, புரியாத காலக்கட்டங்களில் மதம், சாதி, கடவுள், இறை, தெய்வம், ஆண்டவர், தேவர், தேவதை, தேவி, ... என்பனவற்றின் பெயரால் சுரண்டல்கள், ஏமாற்றங்கள், மோசடிகள், தவறுகள், குற்றங்கள், சண்டை சச்சரவுகள், போர்கள், கலவரங்கள், கவலைகள், கலக்கங்கள்,... மிகுந்திடும். இவை பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றி 1. கருவாக்கு, 2. கருவாசகம், 3. குருவாக்கு, 4. குருவாசகம், 5. தருவாக்கு, 6. தருவாசகம், 7. திருவாக்கு, 8. திருவாசகம், 9. அருள்வாக்கு, 10. அருள்வாசகம், 11. மருள்வாக்கு, 12. மருள்வாசகம், 13. பூசாவிதி, 14. கருவறைப்படி, 15. குருமார் ஒழுக்கம் (ஒழுகலாறு - பாடவேறுபாடு) 16. குடமுழுக்கு நூல், 17. எழுந்தருளி உயிர்ப்பு சாத்திறம், 18. குருபாரம்பரியம், ... முதலியவைகளை வெளியிடும் போதுதான் அடங்கி நலம் விளையும். அதுவரை 'ஐந்து பிறவிக் குருடர்கள் படுத்துக் கிடக்கும் யானையைத் தடவிப் பார்த்து அதன் வடிவை விளக்கி உரைத்த கதையாகவே அருளுலகப் பேருண்மைகள் இருக்கும்'...." என்ற பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் வாசகத்தை இங்கு எடுத்துக் கூறிச் சத்தி வழிபாடு வளர்ச்சி பெறும் இற்றை நாளில், சத்தியின் நிலை பற்றிய ஒரு சில பேருண்மைகளை மட்டும் வெளியிட்டுச் 'சத்தி வழிபாடு மலர்ச்சி பெறும் பணி'யைத் துவக்குகிறோம்.

அண்ட பேரண்டங்களில் பதினெண் சித்தர்களால் கணக்கற்ற கோடி ஆண்டுகளாகத் தோற்ற, மாற்ற, ஏற்ற வளர்ச்சிகளைப் பெற்று வந்திட்ட இந்து மதத்தில் 1008 சிவநிலையினர்கள், 243 சத்தி நிலையினர்கள், 108 திருப்பதி நிலையினர்கள், 96 தத்துவ நிலையினர், 64 சித்து விளையாடல் நிலையினர், 48 வழிபடு நிலையினர், 48 வழிபாட்டு நிலையக் கருவறையினர் (கருவறை நிலையினர் - பாட வேறுபாடு) 48 அருட்பட்டத்தினர், 48 அருளாளிகள், 48 மருளாளிகள், 48 தேவர்கள், 48 தேவகுமாரர்கள், 48 தேவ தூதர்கள், 48 ஆச்சாரியார்கள், 48 ஆழ்வார்கள், 48 அமணர்கள், 48 புத்தர்கள், 48 பத்தர்கள், 48 போத்தர்கள், 48 முத்தர்கள், 48 முத்தியார்கள், 48 சத்தியார்கள், ... என்று அருள் ஊற்றுக்களாகச் செயல்படுபவர் பட்டியலிட்டுச் சுட்டிக் காட்டப்படுகின்றனர்.

1. அனாதி சத்திகள், 2. ஆதி சத்திகள், 3. பாதி சத்திகள், 4. மீதி சத்திகள், 5. அனாதி பராசத்திகள், 6. ஆதி பராசத்திகள், 7. பாதி பராசத்திகள், 8. மீதி பராசத்திகள், 9. அனாதி ஈசுவர சத்திகள், 10. ஆதி ஈசுவர சத்திகள், 11. பாதி ஈசுவர சத்திகள், 12. மீதி ஈசுவர சத்திகள், 13. அனாதி மகேசுவர சத்திகள், 14. ஆதி மகேசுவர சத்திகள், 15. பாதி மகேசுவர சத்திகள், 16. மீதி மகேசுவர சத்திகள் - என்று சத்திகள் பதினாறு வகைப்படுகிறார்கள்.

சத்தி பீடங்கள் இருநூற்று நாற்பத்து மூன்று வகையான அமைப்புக்களை உடையது. இதற்கென 1. மந்தரங்கள், 2. மாந்தரங்கள், 3. மாந்தரீகங்கள், 4. மந்திரங்கள், 5. மந்திறங்கள், 6. தந்தரங்கள், 7. தாந்தரங்கள், 8. தாந்தரீகங்கள், 9. தந்திரங்கள், 10. தந்திறங்கள், 11. எந்தரங்கள், 12. ஏந்தரங்கள், 13. ஏந்தரீகங்கள், 14. எந்திரங்கள், 15. எந்திறங்கள், 16. ஆகமங்கள், 17. மீமாம்சைகள், 18. ஆரணங்கள் -- என்று பதினெட்டு வழிபாட்டு முறைகள் உள்ளன.

சத்தியை வழிபடுபவர் பிடரி மூடிடத் தலைமுடியும்; காதளவு பக்க முடியும், மீசையும் வளர்க்க வேண்டும். குருதிப் பலிகள் கொடுத்தும் இசைக்கருவிகள் முழக்கியுமே பூசை செய்ய வேண்டும்.

---- இந்து மதத் தந்தை, குருமகா சன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் கருவூரூர்,
பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி

குறிப்பு:-

(1) துறவிகளும், காவி உடை அணிந்தவர்களும், மொட்டை அடித்தவர்களும், புலால் உணவு உண்ணும் பழக்கத்தை வெறுப்பவர்களும், எதிர்ப்பவர்களும், மறுப்பவர்களும் சத்தியை வழிபடவோ, வழிபாடு செய்யவோ கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது என்று பதினெண் சித்தர்கள் தங்களின் நூல்களில் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறூர்கள். அதாவது குருதிப்பலி இல்லாமல் சத்தி வழிபாடு செய்யக் கூடாது என்பது பதினெண் சித்தர்களின் தெளிவான கொள்கையாகும். இதுவே இந்து மதத்தின் முடிவான கொள்கையுமாகும்.

சிறப்புக் குறிப்பு:

(2) குறிப்பிட்ட சத்திக்குரிய சன்னிதானப் பட்டம் வழங்கப்பட்டவர்களுக்கு நான்கு வகையான பீட பட்டங்களில் ஏதாவது ஒரு பீட பட்டமும் (ஏமகோடி பீடம், காமகோடி பீடம், சோமகோடி பீடம், வாமகோடி பீடம்) வழங்கப்படுவது பதினெண் சித்தர்களின் குருபீட மரபு.

(3) குறிப்பிட்ட சன்னிதானப் பட்டம் பெற்றவர்களுக்கு நான்கு வகையான ஆச்சாரியார் பட்டங்களில் ( இறைமையாச்சாரியார், கடவுளாச்சாரியார், தெய்வீகாச்சாரியார், தேவ ஆச்சாரியார்) ஒரு ஆச்சாரியார் பட்டம் வழங்குவது பதினெண் சித்தர்களின் குருபீட மரபு.

(4) குறிப்பிட்ட சன்னிதானப் பட்டம் பெற்றவர்களுக்கு நான்கு வகையான வாள்கள் பட்டங்களில் (அரிய வாள், கூரிய வாள், சீரிய வாள் [நேரிய வாள் என்ற பாட வேறுபாடு ஏடுகளில் காணப்படுகிறது], பெரிய வாள்) ஏதாவது ஒரு வாள் பட்டம் வழங்குவது பதினெண் சித்தர்களின் குருபீட மரபு.

விளக்கம்: இந்து மதம் தமிழ் மொழியில்தான் பிறந்தது என்பதற்கு மேற்படி அருளுலகப் பட்டச் சொற்களான 1. சன்னிதானம், 2. ஆதீனம், 3. தம்பிரான், 4. பண்டாரம், 5. பண்டார சந்நதி, 6. பீடம், 7. வாள், 8. ஆச்சாரியார், 9. ஆழ்வார், 10. நாயனுர், 11. அடிகளார், 12. அமளிகை, 13. இருக்கை, 14. திருவடி, 15. அருளாளி, 16. மருளாளி, 17. அருளாடு நாயகம், 18. மருளாடு நாயகம், 19. தேவகுமாரர், 20 தேவ தூதர், 21. அமணர், 22. பத்தர், 23. பத்தியார், 24. போத்தர், 25. போத்தியார், 26. புத்தர், 27. புத்தியார், 28. முத்தர், 29. முத்தியார், 30. சீவன் முத்தர், 31. சீவன் முத்தியார், 32. அருவ சித்தியார், 33. உருவ சித்தியார், 34. அருவுருவச் சித்தியார், 35. சிவ பீடம், 36. சத்தி பீடம், 37. சிவசத்தி பீடம், 38. சித்தியார் பீடம், .... முதலிய நாற்பத்தெட்டு வகையான சொற்களின் அழகும் ஆழமும் மிக்க பொருள்களே சான்றுகளாகவும் ஊன்றுகளாகவும் இருக்கின்றன. இவற்றுல், பதினெண் சித்தர்கள்தான் இம்மண்ணுலகில் தங்களின் தாய்மொழியான தமிழ் மொழியில் இந்து மதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கினுர்கள் என்ற பேருண்மை எளிதாக விளங்கிடும். இவற்றிற்கு உரிய இலக்கணங்களும், இலக்கியங்களும் பல்லாயிரக் கணக்கான பெயர்களில் எழுதப்பட்டும், எழுதப்படாமலும்

இருக்கின்றன. (எழுதாக் கிளவிகள், மறைகள் என்பன எண்ணற்ற கோடி --- முறைகள், நெறிகள், வேதங்கள், சித்தங்கள், நாதங்கள், போதங்கள், தத்துவங்கள், ஓதங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், நிடதங்கள், துணைநிடதங்கள், இணை நிடதங்கள், ஆரணங்கள், சாத்திறங்கள், சூத்திறங்கள், தோத்திறங்கள், நேத்திறங்கள், அத்திறங்கள் ---- என்று 1359 வகையான இலக்கியங்கள், இலக்கணங்கள் எழுதப் பட்டிருக்கின்றன.)

நகல் எடுத்தவர் ---- அன்பு / தலைமைப் பணியாளர்
அருகி சிவசத்திகள் சன்னிதானம்
சித்தர் மகன், சித்தரடியார்
தெய்வீகாச்சாரியார் சோ. இரவீந்திரன்
18-5-1984

---

### *அருளாளர்கள் கவனிக்க....*

12-6-84 செவ்வாய்க்கிழமை சித்தர் மாநகர் குருகுலத்தில் பால்குடப் பெருவிழாவிற்கு புனிதக்கலயம் (பூரணக்கும்பம்) கொண்டுவரும் அருளாளர்கள் அன்றிரவு அக்கலயம் குருதேவரால் அருளேற்றித் தரப்பட்ட பிறகு மறுநாள் பகல் 11 மணி முதல் 1-30 மணிக்குள்ளோ அல்லது இரவு 11 மணி முதல் 1-30 மணிக்குள்ளோ அவ்வருட் கலயத்தை வைத்துப் பூசை செய்ய வேண்டும். பிறகு ஒரு வாரம் கழித்து அதாவது 20-6-84 புதன்கிழமை அன்று அவ்வருட் கலயத்தில் உள்ள அருள்நீரை அவரவர் இல்லங்களிலும், பயிர் நிலங்களிலும், தொழில் நிலையங்களிலும் தெளித்து அருட்பயன் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

---

## வாருங்கள் செல்வோம்!!
## காரியேந்தல் பட்டிக்கு !!

பால்குட விழாவிற்கு வருகை தரும் அருளாளர்கள் மதுரை-திருச்சி செல்லும் (மேலூர் வழி) நெடுஞ்சாலையில் கொட்டாம்பட்டியில் இறங்கி திண்டுக்கல் செல்லும் விலக்குச் சாலையில் ஒரு கி.மீ. சென்றால் காரியேந்தல்பட்டி சித்தர் மாநகரை வந்தடையலாம். திண்டுக்கல் காரைக்குடி சாலையில் (நத்தம் வழி) வரும்போது காரியேந்தல் பட்டியிலே இறங்கிக் கொள்ளலாம். மேலும் நகரப் பேருந்தும் நத்தம்-கொட்டாம்பட்டிக்கு இடையில் சென்று வருகின்றது. எனவே, போக்குவரத்து மிகுந்த சாலையில் காரியேந்தல்பட்டி குருகுலம் அமைந்துள்ளது. பதினெண் சித்தர்களின் முறையில் முக்கோண அருட்சத்திக் கோட்டம் அமைந்துள்ளது.

12-6-84 அன்று நடைபெறும் பால்குட விழாவில் பங்கு கொள்ள விரும்பும் அருளாளர்கள், ஆர்வலர்கள், அன்பர்கள் முன்னதாகவே தலைமைப் பொறுப்பாளருக்கு (முகவரி கீழே தரப்பட்டுள்ளது) ரூ 10/-(ரூபாய் பத்து மட்டும்) அனுப்பி தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு செய்யும்போது தங்களின் முழு முகவரியும், என்ன வகையான புனிதக் கலயம் (பூரண கும்பம்) எடுக்க விரும்புகின்றனர் என்பதையும் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

முன்னதாக அறிவிக்க இயலாதவர்கள் 12-6-84 அன்று காலையில் குருகுலத்தில் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு முன்னதாகவோ அன்றோ பதிவு செய்து கொண்டவர்கள் அன்றைய தினம் காலை பத்து மணியளவில் வழங்கும் பதிவு அட்டையைப் பெற்றுக் கொண்டு கொட்டாம்பட்டிக்கு அருகிலுள்ள வலைச்சேரிப் பட்டிக்குச் சென்று ஊருணிக்கரையில் ஒன்று கூட வேண்டும்.

சுமார் மாலை 2 மணியளவில் யாகம் செய்து பதினெண் சித்தர்கள் முறையில் பூசைகள் செய்து அனைவரும் அருட்குடங்களை ஏந்தி குருகுலம் நோக்கி அணிவகுக்க வேண்டும் மாவட்ட வாரியாக! இறுதியாக குடமுழுக்காட்டிய பின் பதிவு செய்து விழாவில் பங்கு கொண்டவர்களுக்கு அருளூறு பூசனைப் பொருட்களுடன் உணவுப் பொட்டலமும் வழங்கப்படும். குருதேவரின் அருளும் ஆசியும் பெற்றுச் செல்லலாம். அஞ்சல் மூலம் பதிவு செய்து கொண்ட அருளாளர்களுக்கும் அன்பர்களுக்கும் யாகச் சாம்பலுடன் அருளூரு பூசனைப் பொருட்கள் குருதேவரால் மந்திரித்து அஞ்சலில் அவரவர் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

தங்களின் மனக்குறைகள் நீங்கி மன அமைதியோடும் மன நிறைவோடும் வாழ்ந்திட பதினெண் சித்தர்களின் அருளூறு பூசனைப் பொருட்களைப் பெற்று உய்வடைய வாருங்கள். இதைக் கண்ணுறும் அன்பர்கள், ஆர்வலர்கள், விருப்பாளர்கள், நம்பிக்கையாளர்கள், அருளாளர்கள் முன்னதாகவே தங்கள் பெயரைக் கீழ்க்கண்ட முகவரியில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

----- சித்தரடியான்
சி. கவிக்குமார்
தலைமைப் பொறுப்பாளர்
56, N.G.O. காலனி
பொன்னேரி - 601 204
செங்கை மாவட்டம்

---